திரு. ச. சங்குமுத்து தேவர் : இந்த அலவன்சு எல்லோருக்கும் வழங்கப் பட்டு விட்டதா ? இன்னும் வழங்கப்படாமல் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தொழிலாளர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து ப்ராஜெக்ட் அலவன்சு தருவதற்கான உத்தரவுகளை அரசு பிறப்பித்திருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சென்ற ஆண்டு இந்த உண்ணுவிரதம் நடந்து மே மாதம் 15-ம் தேதிக்குள் ப்ராஜெக்ட் அலவன்சு கொடுக்கப்பட வேண்டும் என்பதாக உத்தரவிடப்பட்டது. என்றாலும் அது ஏன் இன்னமும் கொடுக் கப்படவில்லை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தொழிலாளர்களின் வேண்டு கோள்களைக் கவனமுடன் பரிசீலனை செய்தபிறகு திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கடானு, இராமநதி திட்டங்களில் அரசுப் பணியிலும், அரசுப் பணி யில்லாத பணியிலும் வேலைக்கு அமர்ந்துள்ள வேலைநிதி ஊதியம் பெறுவோர் அந்தந்தப் பதவிகளில் அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதற்கொண்டு அவர் களுக்கு ஈட்டுப்படி வழங்கப்பட வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது.

Ryots of Chittar-Pattanamkal Channels

* 424 *Q*.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there are proposals under the consideration of the Government to provide lift irrigation facilities to the ryots of the Chittar-Pattanamkal Channels in Kanyakumari district to raised portions?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. என். டென்னிஸ் : சித்தாறு-பட்டணங்கால் செல்லும் வழி மேடுபள்ள மானது. மேட்டில் உள்ள பல நிலங்கள் இந்தக் கால்வாய் மூலமாகப் பயன் அடையாமல் இருக்கிறது. ஆகவே மேட்டு நிலங்களுக்குத் தண்ணீர் பாய லிப்ட் இர்ரிகேஷன் மூலம் தண்ணீர் பாய்ச்ச வேண்டிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சித்தாறு-பட்டணங்கால் திட்டம் நீரோட்டப் பசானத்துக்கு மட்டுமே வகை செய்கிறது. இத் திட்டத் தின் கீழ் இறைவைப் பாசனத்துக்கு வகை செய்யப்படவில்லை. இந்த அயக் கட்டின் உயர்ந்த மேட்டுப் பகுதிகளுக்கு இறைவைப் பாசன வசதிகள் செய்து தர வேறெந்த செயற்குறிப்பும் பரிசீலனையில் இல்லை.

1973 மார்ச் 19]

திரு. ஜே. ஜேம்ஸ்: சித்தாறு-பட்டணங்காலில் போதுமான அளவு தண்ணீர் இருந்தும் பரளியாறு விஸ்தரிக்கப்படாததால் டெய்லெண்டில் உள்ள நிலங்கள் பயன்படாமல் இருக்கிறது. ஆகவே அதை விஸ்தரிக்க, விரிவுபடுத்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. தனிக்கேள்வி போடவேண்டும்.

ஊற்று நீர்க்கிணறு திட்டங்கள்.

*425 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் "ஆர்டீஷியன்" கிணற்றுத் திட்டங்கள் தற்போது எங்கெங்கு நிறைவேற்றப்பட்டுள்ளன?

(இ) அந்தத் திட்டத்தினை விரிவுபடுத்த அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (அ) தென்னார்க்காடு திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டங்களில் நீர் பொங்கி வழியும் கிணறுத் திட்டங்கள் செயல்படுகின்றன. அவை வருமாறு:—

(1) தென்னார்க்காடு—140 கிணறுகள்.

(2) திருச்சிராப்பள்ளி—12 கிணறுகள்.

(3) தஞ்சாவூர்—4 கிணறுகள்.

இதைதவிர சோதனைக்காகத் தோண்டப்பட்ட கிணறுகள் பலவற்றில் நீர் தானே பொங்கி வருகிறது. அது இந்தக் கணக்கில் வரவில்லை.

(இ) நெய்வேலியில் சுரங்க வேலைகள் தொடங்கப்பட்ட பிறகு தானே பொங்கி வழியும் நீர்க் கிணறுகள் வரண்டு வருவதால் அதனை விரிவுபடுத்தும் செயற் குறிப்பு இல்லை.

திரு. வா. மை. அப்துல் ஜாப்பார்: நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் தோண்டுவதற்கு முன்னால் அந்தப் பகுதியில் நிறைய ஆர்ட்டீஷியன் வெல்ஸ் இருந்தன. நிலக்கரிச் சுரங்கம் தோண்ட ஆரம்பித்தவுடன் இதில் ஊறுகிற நீரை இறைக்க இறைக்க அவற்றில் தண்ணீர் வறண்டு அதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு மாற்றுப் பாசனத் திட்டம் ஏதாவது ஏற்படுத்திக் கொடுப்பார்களா? அல்லது நெய்வேலி நிலக்கரி கார்ப்பரேஷனிடம் இருந்து இந்த விவசாயிகளுக்கு நஷ்டஈடு பெற்றுத் தருவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: வரண்டுவிட்ட கிணறுகளை ஆழப்படுத்தி அவைகளில் பம்புசெட்டு வைத்து தண்ணீர் இறைக்க ஏற்பாடு செய்யும் செயற்குறிப்பு இருக்கிறது.